பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்10 வள்ளுவர் ஆண்டு 2026 ஆவணி 08 வியாழக்கிழமை (24-08-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 272

# சித்தன்கேணிப் பகுதிக்கு முன்னேற முயன்ற படையினரைப் புலிகள் விரட்டியடித்தனர்

யாழ்ப்பாணம், ஒக 24 பண்டத்தரிப்பு ஊடாக சித்தன்கேணி நோக்கி முன்னேற நேற்று முன்தினம் மீண்டும் முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கடும் தாக்குதலை அடுத்து படையினர் நேற்றுக் காலை தமது பழைய நிலைகளுக்கு பின்வாங்கினர்.

கடந்த திங்கட்கிழமை பெரும் எடுப்பில் கவச வாகனங்கள், டாங்கிகள் சகிதம் மக்கள் குடியிருப்புக்கள் மீது ஷெல் தாக்குதலை நடத்தியவாறு பண்டத்தரிப்பு ஊடாக சித்தன்கேணியை நோக்கி முன்னேற இராணுவத்தினர் முயன்றனர்.

இந்த முன்னேற்ற முயற்சி விடுதலைப் புலிகளால் கடும் தாக்குதல் மூலம் தடுத்து நிறுத்தப்பட்டது.

விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கடும் தாக்குதலை அடுத்து மக்கள் குடியிருப்புக்கள் மீது ஷெல் தாக்குதல்களை நடத்தியவாறு படையினர் நேற்றுக் காலை தமது நிலைகளுக்குப் பின்வாங்கிச் சென்றனர்.

அரசதரப்பு தகவலின்படி— இந்நடவடிக்கையில் 8 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்றும் 18 பேர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலின் போது விழுப்புண் அடைந்த வீரவேங்கை தமிழரசன் (பொன்னையா கமலநாதன் — திருகோணமலை) வீரமரணம் அடைந்தார்.

படையினர் தரப்பில் இழப்புக்கள் இன்னும் அதிகமாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

# திருமலைக் கடற்படைத் தளத்தை தக்கவைக்க முடியாத ஆபத்து நிலை

## இராணுவப் பாதுகாப்பு கோருகிறது கடற்படை

கொழும்பு, ஒகஸ்ட். 24

இராணுவக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை கடற்படைத் தளத்தை தக்கவைக்க முடியாத பேராபத்தான நிலை தோன்றியுள்ளதாக கடற்படை அபாய மணி அடித்திருக்கிறது.

திருமலைத் தளத்தை விடுதலைப் புலிகள் எந்நேரமும் தாக்கலாம் என்றும் மேலதிக இராணுவப் பாதுகாப்பு வழங்குமாறும் கடற்படை மேலிடம் பாதுகாப்பு அமைச்சிடம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று இதுபற்றிய தகவலை வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியின் பிரகாரம் —

"கடற்கரையோர முனைகளை மட்டுமே கடற்படையினரால் கண்காணிக்க முடியும்" — என்றார் படைத் தளபதி ஒருவர்.

தற்போதைய பாதுகாப்பு முன்னணி நிலைகள் ஊடாக விடுதலைப் புலிகள் ஊடுருவுவதைத் தடுக்க மேலும் தரைத் துருப்புகளின் அணி அவசரமாகத் தேவைப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்

[7 ஆம் பக்கம் பார்க்க]

## மக்கள் வெளியேறி விட்டதால்

## மயானம் போல மாறிய வலி. மேற்குப் பிரதேசம்!

வலி. மேற்கு, ஒக. 24 வலிகாமம் மேற்குப் பகுதியில் இருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் வெளியேறிவிட்டனர்.

சங்கானை, சித்தன்கேணி, மூளாய், மாவடி, பொன்னாலை, தொல்புரம், வட்டுக்கோட்டை, அராலி ஆகிய இடங்களில் இருந்து மக்கள் அனேகமாக முழுமையாக வெளியேறிவிட்டதால் வலி. மேற்குப் பகுதி மயானம் போல காட்சியளிக்கின்றது.

நாய்கள் வீதிகளில் ஊளையிட்டவாறு அங்கும் இங்கும் அலைந்து திரிகின்றன. கால்நடைகளும் தீவனம் தேடி அலைகின்றன. (ஒ-175)

## ஷெல் தாக்குதல்: சங்கானையில் ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஒக. 24 சங்கானையில் நேற்றுக் காலை 6 மணியளவில் இடம்பெற்ற ஷெல் வீச்சுக்கு இலக்காகி ஒருவர் படுகாயமடைந்தார்.

வடலியடைப்பைச் சேர்ந்த கே. சிவசுப்பிரமணியம் என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார். (ஒ-13)

## தமிழ் இளைஞர் ஐவர் கைது

பேலியகொட பகுதியில் பொலீஸார் கடந்த திங்கட்கிழமை காலை நடத்திய தேடுதலின் போது ஐந்து தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். (ஒ-3)

## சித்தன்கேணியில் விழுந்த ஷெல்லுக்கு ஒருவர் பலி

வலி. மேற்கு, ஒக. 24 வலிகாமம் மேற்குப் பகுதியிலுள்ள குடியிருப்புக்களை நோக்கி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 8 30 மணியளவில் நடத்தப்பட்ட ஷெல்வீச்சுக்கு இலக்காகி இளம்குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

சித்தன்கேணி டச்வீதியைச் சேர்ந்த கனகசுந்தரம் வரதராசா (45 வயது) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். இவர் வடபிராந்திய போக்குவரத்துச் சபை சாரதியாகப் பணிபுரிந்தவர்.

இவரது வீட்டுக்கு அருகில் ஷெல்கள் விழுந்து வெடித்தன இவர் நித்திரையாக இருந்த வேளை ஷெல் சிதறல் ஒன்று இவரின் கண்ணுக்குள் பாய்ந்து விட்டது துடித்தார் அவர்.

ஆனால் அவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துவர முடிய

(7 ஆம் பக்கம் பார்க்க)

## வீடுகள், கடைகள் உடைத்து உடைமைகள் பல சூறை!

யாழ்ப்பாணம், ஒக. 24 நேற்று காலையில் படையினர் பின்வாங்கிச் செல்கையில் சங்கானை, சித்தன்கேணி, பண்ணாகம் உட்பட பல பகுதிகளையும் நோக்கி பலத்த ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

பண்டத்தரிப்பு, வடலியடைப்பு பகுதிகளில் இராணுவத்தினர் மக்களின் பெரும்பாலான வீடுகள், கடைகளை உடைத்து உட்புகுந்து பெருமளவில் உடைமைகளை சூறையாடியுள்ளனர்.

வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள் உட்பட மின் உபகரணங்களையும், பெறுமதிமிக்க உடைமைகளையும் உலர் உணவுகளையும் படையினர் சூறையாடிக் கொண்டு சென்றுள்ளனர்.

வீடுகளில் இருந்த உணவுப் பொருள்களையும், கால்நடைகளையும் படையினர் தமது உணவாக்கிக் கொண்டுள்ளனர் சமையல் உபகரணங்கள் எங்கும் சிதறிக் கிடக்கின்றன. [ஒ-3]

## தமிழீழ பாதுகாப்பு நிதிக்கு ரூபா 75,000 அன்பளிப்பு

### அரச ஒப்பந்தகாரர் வழங்கினர்

யாழ்ப்பாணம், ஒக. 24 தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதிக்கு வடமாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கத்தினர் 75,000 ரூபாவை அன்பளிப்புச் செய்தனர்.

யாழ். நாவலர் மண்டபத்தில் நேற்றுக் காலை தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதி தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது.

அப்போதே வடமாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் மு. கி. சண்முகராசா, தமிழீழ நிதிப்பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தியிடம் இந்த அன்பளிப்பைக் கையளித்தார்.

நேற்றைய கலந்துரையாடலுக்கு விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. ராஜன் தலைமை வகித்தார். நிதிப் பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தி உரையாற்றினார்.

தமிழீழ நிர்வாக சேவையின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு. ரவியும் கலந்துரையாடலில் பங்குபற்றினார். அரச ஒப்பந்தகாரர் சங்க உறுப்பினர்களும் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டனர். (அ-4)

# நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா

## ★ உதயன் சிறப்புமலர் ★

நல்லூர்ப் பதிவாழும் வேலவா நலம் செய்து காத்திட ஓடிவா!


**நாகராஜா களஞ்சியம்**
பல் பொருள் வாணிபம்

607, காங்கேசன்துறை சாலை,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

''நல்லைக் கந்தன் நலம் பல அருள்வான்''
சஞ்சிகைகள், புத்தகங்கள், காகிதாதிகள்,
வாழ்த்து மடல்கள், அழகுசாதன பொருள்கள்
விற்பனையாளர்

**ஆனந்த்ஸ்**
புத்தக நிலையம்

21B. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

**ஜெயா ஸ்ரோர்ஸ்**

418, அரசடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
பத்திரிகை பல்பொருள் வாணிபம்

**வதனி களஞ்சியம்**
பல் பொருள் வாணிபம்

கண்டி வீதி, மிருசுவில்

பத்திரிகைகள், சகல சஞ்சிகைகள்
பெற்றுக்கொள்ள

**''பரம்ஸ்''**

இல. 1, நவீனசந்தை. பஸ்நிலையம்,
சாவகச்சேரி.

அசல் 22 கரட் தங்க நகைகளை
குறித்த தவணையில் பெற்றுக்கொள்ளவும்
விரும்பிய டிசைன்களில்
நகைகளைச் செய்து பெற்றுக்கொள்ளவும்
நாடவேண்டிய ஒரே நிறுவனம்

**ஸ்ரீவாணி ஜுவல்லேர்ஸ்**

173, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்''
கண் மற்றும் நோய்களுக்கான சிறந்த வைத்திய
ஆலோசனைகளை வழங்குவோர்:

**C.C.C. கிளினிக்**

சுபாஸ் இல்லம்
இல. 37, விக்டோறியா வீதி, யாழ்ப்பாணம்.

அனைவர் வாழ்விலும் ஒளி மிளிர, இருள் அகல
★ எமது உளம் நிறைந்த வாழ்த்துக்கள் ★

விழி
உங்களிடம்
அதன்
ஒளி
எங்களிடம்



சகல வித மூக்குக் கண்ணாடிகளுக்கும்
நீங்கள் நாட வேண்டிய இடம்:

**★ எரிக் கணேஷ் ★**

566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சகல ஆடம்பர விளையாட்டு
பாவனைப் பொருள்களையும்
நிதான விலையில் விற்பவர்கள்

**றாஜு ஸ்ரோர்ஸ்**

67, 69, லெப். கேணல் சந்தோசம் தெரு,
யாழ்ப்பாணம்.


## நல்லூர் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 24

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தின் 24ஆம் நாளான இன்று தேர்த்திருவிழாவாகும். இன்றைய தினம் ஆலயச்சூழலில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள்:

★ நாவலர் மணி மண்டப முன்றிலில் —

மாலை 6 மணி — 7 மணி வரை திரு. சோ. பத்மநாதனின் சமயச் சொற்பொழிவு

7 மணி — 8-30 மணி வரை திரு. என். வி. எம். நவரத்தினம் பாட்டு.

★ நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் —

பிற்பகல் 3 மணி முதல் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின் சமயப் பேருரை ''திருமந்திரம்''

★ மேற்கு வீதி ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் —

மாலை 5-30 மணிக்கு பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்தசர்மாவின் ''விஷ்ணு பாகவதம்'' தொடர் இசைப் பேருரையில் ''ஸியமந்தக மணி'' (எ-30-111)

## புலிகளின் குரல் வானொலியில்

**24 – 08 – 1995**

**வியாழன் இரவு**

- ★ 8-02 — சொல்லுங்கள் பார்க்கலாம்
- ★ 8-10 — நோய் தீர்க்கும் மூலிகைகள்
- ★ 8-20 — உழைப்போம் உயர்வோம் — நிகழ்ச்சியில் ''துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டம்'' சித்திரம்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — மொழியும் வாழ்வும்
- ★ 8-50 — எமக்களின் தேசம்

**25 – 08 – 1995**

**வெள்ளி காலை**

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — மணியாரம்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-45 — தாயகப்பாடல்கள்

## தமிழீழ வானொலியில்

**வியாழன் மாலை**

- ★ 5-01—சிந்தனைச்சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதினவை
- ★ 5-15 — மழலைகளுக்காக
- ★ 5-30 — இசையும் கதையும் — நிகழ்ச்சியில் ''தியாக வேள்வியில்''
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — பொன் விளையும் பூமி
- ★ 6-10 — செய்திகள்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — கேள்வி - பதில் — விளையாட்டுத் தொடர்பானவை

## ஆசிரிய கலாசாலை மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஓக. 24

பலாலி ஆசிரிய கலாசாலை இறுதிப் பரீட்சையில் இதுவரை சித்தியடையாதோரையும், நூனசித்தி பெற்றவர்களையும் எதிர்வரும் செப்ரம்பர் முதலாம் திகதிக்கு முன்பாக வந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்படி அதிபர் அறிவிக்கின்றார். (எ)


**இனாம்! இனாம்!!**

**அண்ணா தொழிலக விற்பனை நிலையத்தில்**

நல்லூரில் தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தினால் நடத்தப்படும் கண் காட்சிச்சாலையில் தேர்த்திருவிழா அன்று ரூபா100/- கொடுத்து

- ★ 1பை இலகு தோசை மா
- ★ 1 பை இலகு அப்பம் மா
- ★ 100gr அண்ணா கோப்பி

என்பனவற்றை வாங்கி ஒரு கொப்பி, ஒரு முருகன் படம், அர்ச்சனை மாலையை இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

(சி-2095) — அண்ணா தொழிலகம்.


## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் விவரம் திரட்டல்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் கல்லூரியில் பயின்ற பழைய மாணவர் தொடர்பான பதிவேடு ஒன்றினைத் தயாரிக்க தீர்மானித்துள்ளது. அதற்கமைய தங்களது பெயர் விலாசம், தற்போதைய தொழில், கல்வித் தகைமைகள் என்பவற்றை 1995-09-15 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்

யாழ். இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம். [சி-2102]


**பழமரம் நடுக, பயன் மிகப் பெறுக!**

நல்லூர் உற்சவத்தையொட்டி

**மலிவு விற்பனை!**

மா, பலா, மாதுளை, எலுமிச்சை, தோடை, கொடித்தோடை, கொய்யா முதலிய நல்லினக் கன்றுகளும் மற்றும் தென்னை, கமுகு, மலைவேம்பு, சமண்டலை முதலியனவும் விற்பனைக்கு.

125, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(கல்யாண மண்டபம் முன்பாக)

(சி/2103) சைவ. வி.வி. சங்கம்.

**ST. JOHN'S INSTITUTE FOR CAREER GUIDANCE COMPUTER STUDIES**

கீழ்வரும் பகுதிகளுக்கான புதிய வகுப்புக்கள்
25 – 08 – 1995 மாலை 5 மணிக்கு
ஆரம்பமாகும்

1. G W BASIC [$2\frac{1}{2}$ Months]
2. PASCAL [3 Months] பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவருக்கு.

★ தமிழ் மாணவர்கள் கணனி அறிவில் பின்தங்கியவர்களாக காணப்படக்கூடாது என்ற நோக்கில் செயற்படுகின்றது

பதிவாளர்,
காரியாலயம்,
பரி. யோவான் ஆலயம்,
சுண்டிக்குளி.
(பரி. யோவான் கல்லூரி முன்பாக)

(சி/2105)

# நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா உதயன் சிறப்புமலர்

தேரேறித் திருவருள் நல்கி
வேரோடு வினை நீக்கு நல்லூரா!

## வினோ நகைப் பூங்கா

தங்க வைர நகை வியாபாரம்

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்.

22 கரட் தங்க நகைகள் குறித்த காலத்தில்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

இல. 185 சந்தோசம் தெரு
[கஸ்தூரியார் வீதி]
யாழ்ப்பாணம்.

நவீன அழகிய தங்க
ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்:

22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் குறித்த தவணையில்
செய்து கொடுக்கப்படும்.

## புனிதா நகை மாடம்

இல. 239, சந்தோசம் வீதி,
யாழ்ப்பாணம்.

தங்க நகைகளைப் பெற்றுக் கொள்ள
சிறந்த ஸ்தாபனம்

- ★ 22கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
- ★ பழைய நகைகள் நியாயமான விலைக்கு வாங்கப்படும்.
- ★ பவுண் விற்கவரும் போது அடையாள அட்டை அல்லது குடும்ப அட்டையை தவறாது கொண்டு வரவும்.

## அருள்முருகன் நகை அகம்

இல. 96/1 சந்தோசம் தெரு,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை: சிவா நகைமாடம்
யாழ் வீதி, சாவகச்சேரி.

அழகுசாதன, பிளாஸ்டிக் பொருள்கள்
மற்றும் ரேடியோ, மணிக்கூடு,
பொலித்தீன் பைகளை
மொத்தமாக பெற்றுக்கொள்ள

## ஜெயா அழகு மாடம்

187, இராசன் தெரு.

சில்லறையாக வாங்குவதற்கு!

## ஜெயா அழகு மாடம்

177A, இராசன் தெரு,
யாழ்ப்பாணம்.

# வெந்த உள்ளங்கள் மெல்லத் தேற தேரேறி வருகிறான் நல்லூர் முருகன்

தொல்லை வினையகற்ற நல்லூரில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமான் ஊரார் சூழ தேரேறி வரும் திருநாளே இன்றைய பெருநாள். பக்திதமுழக்கங்களுடன் இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால், இயல்கொடு தோத்திரம் ஒருபால் இசைக்க, மங்கலவாத்தியங்களுடன் பக்தர்களின் அரோகரா முருகா கோஷம் விண்ணையும் மண்ணையும் அதிரய்ய தேரேறி வருகிறான். ஒளவைக்குப் பழந்தந்த ஐயன்: அகத்தியருக்கு அறிவு தந்த பெரியன்; நக்கீரர் புகழும் படைவீடுகளுடையோன்; நெஞ்சக்கன கல்லு நெகிழ்ந் திருக அருணகிரியால் புகழப் பட்டவன்; குமரகுருபரருக்கு வாக்குத்தந்தவன் குறிஞ்சிக் குமரன்; என்றெல்லாம் புகழப்படுபவனான வெற்றி வேலன் நல்லூர்ப் பகுதியில் உடலுங்கொண்டு துஞ்சிய மனத்தராய் தஞ்சமென்று கூறி நல்லூர்ப்பதியில் கடம்பா, கார்த்திகேயா, காங்கேயா, சுவாமிநாதா, தண்டாயுதபாணிதெய்வமே, ஆறுமுகா, வடிவேலா, வெற்றிவேலா, முருகா என்றெல்லாம் கூவி அழைக்கின்றார்களே!

இனிமேனும் எம்மை எல்லாம் ஆட்கொண்டு தேரேறி

கலைமணி பொன். தெய்வேந்திரன் –



முழங்க தேரேறி ஆறுமுகப் பெருமான் வீதிவலம் வரும் காட்சி அடியவர்கள் ஆறுதல் பெறவும், நொந்து வெந்த உள்ளங்கள் மெல்ல மெல்லத் தேறுதல் பெறவும் பக்த மனத்தவருக்கு மாட்சி தருவதேயாகும்.

ஆம். முருகன் தமிழனின் தனிப்பெருந்தெய்வம். 'வந்த வினையும் வருகின்ற வல்வினையும் கந்தனென்று சொல்லக் கலங்குமே' என்றார் குமரகுருபரர். முருகன் அருளாளன். தன்னை அடைந்த அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்ற கருணைப் பெருங்கடல், அதனாலேயே மூவிருமுகங்கள் போற்றி முகம்மொழி கருணைபோற்றி என வியக்கிறார் கச்சியப்பர்.

அடியவர் வினையகற்றும் அற்புத வடிவேல் சித்திகளும், முத்தியும் தரும் வள்ளல். வள்ளி தெய்வானை சமேத வள்ளல். துள்ளி வரும் மயிலேறிவரும் பெருவள்ளல். வற்றாத ஜீவநதி போல் அருளை வாரி வழங்கும் அருட் பெருங் கருணைக்கடல் வலிந்தவரையும் மெலிந்தவரையும் வருகவென அழைத்து வரம் தரும் பெருங்கருணைத் திறம் படைத்தவர். அஞ்ஞான இருளகற்றி மெஞ்ஞான ஒளி தரும் ஞானமூர்த்தி. கற்பனையையும் கடந்தவனாகி கடம்ப மாலையும் வேலுங் கொண்டு எந்த வேளையும் அருள் பாலிக்க வல்லவன் கந்தவேள்.

### வழி தெரிகிறது

இத்தனை பெருமைக்கும் அருமைக்கும் உரிய கந்தன் தமிழர் உரிமைகளைப் பெற்

குடி கொண்டதால் எல்லோர் மனத்திலும் ஒரு ஒளி பிறக்கிறது. வழி தெரிகின்றது.

எண்ணற்ற மக்கள் கண்ணுதற் கடவுளின் கருணை பெற்றும், பிறந்த மண்ணற்றவர்களாய் இடத்திற்கு இடம் ஓடி, இருக்க ஓர் இடம் தேடி பசியும் பட்டினியுமாய், வெந்த உள்ளமும், நொந்த வருகையில் அல்லல் போக்கி, வினைகளைந்து துயர் நீக்க வேண்டும் எனப்பல்லாயிரக் கணக்கான மக்கள் வேண்டி அழும் காட்சியே இன்றைய காட்சி. வேண்டுவார் வேண்டுவதை ஈயும் நல்லூர் முருகனிடம் அழுதும் தொழுதும் நின்று அருளைப்பெறுவோமாக. ✶

நல்லூரின் நாயகனே முருகப்பா!
நாடி வந்தோம் எமக்கு அருளப்பா!

✶ சம்பந்தங்கள் கூடிவந்தால் சானுகாவில் நகையெடுப்போம்! — பழமொழி

சானுகாவில் நகை யெடுத்தால் சம்பந்தங் கூடி வரும்!! — புது மொழி

## சானுகா நகை மாடம்

(அழகு நகைகளின் அரங்கம்)
198H, சந்தோசம் (கஸ்தூரியார்) வீதி,
யாழ்ப்பாணம்.

மங்கள நிகழ்வுகளை அதி நவீன
தொழில் நுட்பக்கருவிகள் மூலம்
வீடியோ படம் பிடித்திடவும்
புகைப்படம் பிடித்திடவும்

## அரவிந் ARAVINTH

வீடியோ, புகைப்படச் சேவை

326, நாவலர் வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

## நல்லூர் கந்தன் தேர்த் திருவிழா சிறப்புற எமது வாழ்த்துக்கள்

தகிக்கும் கோடை வெப்பத்தை தணிக்கும் ருசிமிக்க குளிர்களி, குளிர்பானம் மற்றும்
கேக் சிற்றுண்டி வகைகளுக்கும், தித்திக்கும் ஐஸ்கிறீம் வகைகளுக்கும் யாழ். முன்னணி சுவையகம்

## லிங்கம் குளிர்களி நிலையம் (கூல் பார்)

வெலிங்டன் சந்தி, 52, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

# நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா உதயன் சிறப்புமலர்


நல்லூர்க் கந்தா வா!
நமக்கு அருளைத் தா!

**திருமாட்டி** (சீமாட்டி) [புடைவைக்கடல்]

திருமண சுபமுகூர்த்தங்களுக்குத் தேவையான பனாரஸ், காஞ்சிபுரம், வைகுரிசில்க், பெங்களூர்சில்க், பட்டுவேட்டிகளின் வகராசியான ஒரே ஸ்தாபனம்

★ திருமாட்டி ★

மங்கையர், ஆடவர் மனதைக் கொள்ளை கொள்ளும் வண்ண வண்ண பட்டு, பருத்தித் புடவைக் கடல்

★ திருமாட்டி ★

ஜப்பான், அமெரிக்கன் இந்தியன் வண்ண வண்ணச் சாறி வகைகளுக்கு பெயர் பெற்ற நிறுவனம்

★ திருமாட்டி ★

அனைத்துப் புடைவைத் தினுசுகளும் சங்கமிக்கும் புடைவைப் பெருங்கடல்

**திருமாட்டி** (சீமாட்டி)
**(புடைவைக் கடல்)**

122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.



சிறந்த வேலைப்பாடுள்ள தங்க வைர நகைகளை 22 கரட் தங்கத்தில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

ஓடர்கள் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

**யமுனா நகையகம்**
**தங்கப்பவுண் நகை வாணிபம்**

இல. 177D, சந்தோசம் தெரு,
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.



உங்கள் மணிக்கூடுகள் யாவற்றையும் மிகவும் நல்ல முறையில் திருத்துபவர்களும் விற்பனையாளர்களும்

அத்துடன்

உங்கள் மங்களகரமான நிகழ்வுகளை கமராக்கள் மூலம் படம் எடுத்திடவும் புதிய வீடியோ கமராக்கள், மிக்சர்கள் மூலம் வீடியோ படம் எடுத்திடவும் இன்றே நாடுங்கள்.

★ **குணம் அன் கோ** ★

இல. 21 A மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.



★ பாடசாலை காரியாலய உபகரணங்கள்
★ காகிதாதிகள் ★ அச்சுமைகள்
மற்றும் பல பொருள்கள்
மொத்தமாகவும், சில்லறையாகவும், மலிவாகவும் பெற்றுக்கொள்ளக் கூடிய

★ ஒரே ஸ்தாபனம் ★

**சிங்கம் வர்த்தக நிலையம்**

இல: 290 கேணல் கிட்டு சாலை,
யாழ்ப்பாணம்.

**SINGAMM INDUSTRIES**
No: 290, HOSPITAL ROAD.
JAFFNA.



★ தரமான சிற்றுண்டி வகைகளுக்கும்
★ தரமான சுவையான ஐஸ்கிறீம்
★ குளிர்பான வகைகளுக்கும்

யாழ் நகரில் பிரபல்யம் வாய்ந்தவர்கள்

**கல்யாணி குளிரகம்**
(கல்யாணி கிறீம் கவுஸ்)

இல: 73, சந்தோசம் தெரு (கஸ்தூரியார், வீதி,)
யாழ்ப்பாணம்.


## செவ்வேளின் வேல் ஒளியிலே அக இருள் நீங்கி அஞ்ஞானம் அகலும்

சிவநெறிச் செம்மல்
**வை. அநவரத விநாயகமூர்த்தி**

முருகன் திருக்கரத்தில் உள்ள வேல் ஞான சக்தி ஆகும். அவன் ஒரு பெரு வீரன் மட்டுமல்ல, ஞானந்தானுரு வாகிய நாயகன் என்று கந்த புராணம் கூறுகிறது. கந்தனைக் கதிர்வேலவன் என்று பக்தர்கள் போற்றிப் புகழ்கின்றனர். பகலவனைக் கண்டதும் உலகைச் சூழ்ந்திருந்த இருள் விலகுகின்றது. அது போல அறுமுகனைக் கண்டதும் அகவிருள் நீங்குகின்றது. சூரியன் சுயப்பிரகாசமுடைய



வன். எனவே, அவன் கதிர் ஒளியைப் பரப்புகிறான் அந்த ஒளியில் இருள் தானாகவே விலகி விடுகிறது. அதே போன்று ஞானச்சுடராக, ஞான சக்தியாக விளங்கும் வெற்றிவேலின் ஒளியிலே அகவிருள் நீங்குகின்றது. அத்துடன் கேடுகள் அனைத்திற்கும் அடிப்படையாக விளங்கும் அஞ்ஞானமும் அகன்று விடுகின்றது.

நக்கீரர், முருகன் அருள் பெற்ற சிறந்த கவிஞர் குன்று தோறும் குடியிருக்கும் குமரனிடத்து மிகுந்த பற்றுக் கொண்டவர். நெற்றிக் கண்ணைக் காட்டிலும் குற்றம் குற்றமே என்று அச்சமின்றி ஆலவாய் அவிர்சடைக் கடவுளுடன் வாதிட்டவர். இவர் ஒரு சமயம் கயிலையை நோக்கிப் புறப்பட்டார். செல்லும் வழியில் குளம் ஒன்றில் நீராடிவிட்டு அதன் கரையோரத்தில் உள்ள அரச மரத்தின் நிழலில் சிவபூசை செய்து கொண்டிருந்தார்.

அந்நேரத்தில் அரச மரத்திலிருந்து ஓர் இலை அவருக்கு முன்னே பாதி நீரிலும் பாதி கரையிலும் விழுந்தது. நீரிலே விழுந்த பாதி மீனும் தரையிலே விழுந்த பாதி பறவையுமாகி மீன் பறவையை நீரினுள் இழுக்கப் பறவை மீனைத் தரையில் இழுத்தது. நக்கீரர் அப்புதுமையை

(5 ஆம் பக்கம் பார்க்க)


தேர் இவர்ந்து வரு முருகா,
தேசம் பிறந்திட வா முருகா!



தரமான தங்க, வைர நகைகளை

விரும்பிய டிசைன்களில் பெற்றுக் கொள்ள நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் நாட வேண்டிய இடம்

**அருச்சுனா நகை மாடம்**
தங்கப் பவுண் நகை வியாபாரம்

120B, சந்தோசம் தெரு, யாழ்ப்பாணம்.
(கஸ்தூரியார் வீதி)



அபிராமி நகை மாடம்
(முன்னைநாள் சீமாட்டி நகை மாளிகை)

★ சிறந்த வேலைப்பாடுள்ள தங்க நகைகளை விரும்பிய டிசைன்களில் தெரிவு செய்யலாம்.
★ ஓடர்கள் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

**அபிராமி நகை மாடம்**

220 A, சந்தோசம் தெரு, (கஸ்தூரியார் வீதி),
யாழ்ப்பாணம்.



புதினப் பத்திரிகைகள்
சகல சஞ்சிகைகளும் பெற்றுக் கொள்ள

**A. S. வேதநாயகம்**

82, கண்டி வீதி, கச்சேரியடி,
யாழ்ப்பாணம்.



★ **ரவி ஒலிகானம்** ★

இசையால் வசமாகாத இதயம் எது?
ஆம் உங்களையும் வசப்படுத்துகின்றது. "கொம்பக்டிஸ்க்" செவிகளுக்கு விருந்தூட்டும் ஒலி கேணல் நிரம்பப் பெற்ற அதி உன்னத நாதத்தை வெளிப்படுத்தும் கொம்பக்டிஸ்க் மூலம் சமீபத்தில் வெளியாகிய அனைத்து ரசப் பாடல்களையும் அனுபவம் நிறைந்த ஒலிப்பதிவாளர்களினால் உடனுக்குடன் ஒலிப்பதிவு செய்து கொடுக்கும் ஒரே ஸ்தாபனம்.

★ ரவி ஒலிகானம் ★

அது மட்டுமா?
உங்கள் எண்ணத்தில் நிழலாடும் வகையில் இன்றைய நிகழ்வை என்றுமே நினைவூட்டும் அற்புதக் காட்சியாக அதி நவீன உபகரணங்களை உபயோகித்து வீடியோ படப் பிடிப்பு சேவையில் உயிர்நாடி போடும் இன்றைய நிறுவனம்

★ ரவி ஒலிகானம் ★

அத்தோடு எழில் மிகுந்த மிக்சிங் முறையில் புகைப்படம் பிடித்து மகிழ்ந்திட, மின் உபகரணங்கள் எதுவானாலும் அனுபவம் மிக்கவர்களினால் பழுதுபார்க்க

★ ரவி ஒலிகானம் ★

வட இலங்கையில் என்றுமே நினைத்திருந்து உங்கள் தேவைகளை எங்கள் சேவையாகச் செய்ய எந்நேரமும் முன்வரும் உங்கள் நண்பர்கள்

**ரவி ஒலிகானம்** (சுப்பஸோ வீடியோ)

100A, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

# நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா உதயன் சிறப்புமலர்


வெதும்பியே வேகிறோம்
வேலோடு விரைந்துவா நல்லூரா

* பாடசாலை உபகரணங்கள்
* புதினப் பத்திரிகைகள், சஞ்சிகைகள்
* அன்பளிப்பு பொருள்கள்
* கோல்ட் கவரிங் ஆபரணங்கள்
* பாதணிகள்

அனைத்தும் பெற்றுக்கொள்ள

அருள் நாயகி
புத்தக நிலையம்

இல. 12, பேரூந்து நிலையம்,
கொடிகாமம்.

நவநாகரீக நங்கையர்களுக்கு ஏற்ற
நவீன டிசைன்களில்
22 கரட் தங்க ஆபரணங்களை
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்



சிறி பிரியா
நகைப் பூங்கா

இல.214 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

* சிற்றுண்டி வகைகள்
* புதினப் பத்திரிகைகள்
* சஞ்சிகைகள்

விற்பனையாளர்

சிவானந்தா கபே

648, பருத்தித்துறை வீதி
(நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்)
நல்லூர்

சிவன் ஸ்டோர்ஸ்
(பல்பொருள் வாணிபம்)

புதினப் பத்திரிகைகள் சகல சஞ்சிகைகள்
விற்பனை முகவர்கள்

பல்கலைக்கழக சந்தி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

அம்பிகை றேட்சென்ரர்
(பல் பொருள் வாணிபம்)

இல. 362, நேசிங்ஹோம் சந்தி,
திருநெல்வேலி.

தவம் களஞ்சியம்
பல்பொருள் வாணிபம்

1004, கே. கே. எஸ் வீதி.
நாச்சிமார் கோயிலடி. யாழ்ப்பாணம்.

ஆதவன் விற்பனை நிலையம்
பல் பொருள் வாணிபம்

கண்டி வீதி,
(புகையிரத நிலையம் முன்பாக)
மிருசுவில்.


## செவ்வேளில்...

[4 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கண்டு மிகவும் வியப்படைந்தார். சிவ வழிபாட்டிற்குத் தவறு உண்டாயிற்று. சிவ பூசையில் வழுகிய குற்றத்தை வைத்து 'கற்கிமுகி' என்ற பூதம் நக்கீரரை மலைக் குகைக்குள்ளே அடைத்து விட்டது. முன்னரே தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரை இவ்வாறு அடைத்து வைத்திருந்தது. நக்கீரருடன் ஆயிரவராக்கித் தன் கொள்கைப்படி உண்ணுவதற்கு நீராடப் போயிற்று.

நக்கீரர் முருகனை நினைத்து அவன் திருக்கரத்தில் உள்ள வேலைப் போற்றிப் பாடத் தொடங்கினார். திருமுருகாற்றுப்படை என்னும் அருள் நூலையே பாடி விட்டார். பாமாலைக்கே வசப்படும் பச்சை மயில் ஏறி வரும் குமரன், தன் கைவேலினால் அக்குகையைப் பிளந்தார். நக்கீரர் உட்பட ஆயிரவரும் சிறை விடுக்கப்பட்டனர். பூதமும் கொல்லப்பட்டது இதனைப் பகழிக் கூத்தர் தமது திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழில் "ஏர் கொண்ட பொய்கை தனில்" என்று தொடங்கும் பாடலில் நயம்படக் கூறியுள்ளார்.



முருகன் பக்தர்கள் பலர் வேல் வழிபாட்டின் சிறப்பு நோக்கி வேலை மாத்திரம் வைத்துப் பூசித்து வருவதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் மூலஸ்தானத்தில் வேல் வடிவில் ஆறுமுகப் பெருமான் காட்சி தருகிறார். செவ்வேள் திருக்கை வேலை அன்புடன் பூசித்து வருவோருக்கு ஆறுமுகப்பெருமானின் சிந்தனை இடையறாது ஏற்பட்டுக் கொண்டேயிருக்கும் என்பதில் எள்ளளவேனும் ஐயமில்லை. அந்த அடியார்களுக்கு ஒப்பற்ற துணையாக விளங்குவதும் அப்பெருமானின் வடிவேல் ஆகும்.

அருணகிரி நாதர் தமது கந்தரலங்காரத்தில், 'தனி வழிக்குத் துணை வடிவேலு செங்கோடன் மயூரமே' என்று நாம் செல்லும் தனி வழிக்கு முருகப் பெருமானுடைய ஒளி பொருந்திய வேலும மயிலும் துணையாக வரும் தன்மையை நன்கு விளக்குகின்றார். எனவே நமது கஷ்டங்கள் துயரங்கள் தீர நாமெல்லோரும் செவ்வேளின் திருக்கரத்தில் விளங்கும் வேலைப் போற்றிப் துதிப்போமாக ★

## நாம் நிமிர்ந்து வாழ்வோம்

தேரினிலே தேவியர்கள் சூழவரும் தேவா!
தெய்வ ஒளி வீசிடும் நல்லூரினருள் வேலா!
பாருலகிலே தமிழர் நாடுந் தமிழ் ஈழம்
பல்லவரும் போற்ற உருவாக்கி அதைக் காக்க
வீரமுடன் போர்புரியும் வேங்கைகளின் வேட்கை
வெற்றியினை ஈட்டிடவே வேண்டும் என வேண்டும்
பேருடனே சேர்ந்து வந்துன் பேரருளிற் றோய்வோம்
பெருமை தரு மீழமண்ணில் நாம் நிமிர்ந்து-
வாழ்வோம்.

— சிற்பி

## தேரினிலே வந்தருள்வாய்!

அறுபடையில் அன்று நின்று,
அசுரர்களை வதைத்தவனே,
அறு முகமாய் (நீ) அழிக்க,
அசுரர்கள் பல உண்டு!
மாறுபடும் சூரனையும்,
மழிந்தழுந்து வென்றவனே!
ஆறுமுகனாய் நீ வந்து
அழித்திடுவாய் அசுரர்களை
ஆறுமுகனாய் அடியவரை
அரவணைத்துக் காத்திடவும்,
தேறுதலைத் தந்திடவும்
தேரினிலே வந்தருள்வாய்!

— சிவகவி

## தேரேறும் தேவே!

அஞ்சலென நல்லூரில் அருள்புரியும் ஐயா!
அசுரர்குலம் அழித்தன்று தேவர்குறை தீர்த்தாய்
வெஞ்சமரை எதிர்ந்தெழுந்த வீரருக்குத் துணையாய்
வேலேந்தி அவர் நெஞ்சில் விரும்பியுறைந்
தருள்வாய்
வஞ்சமனத் தெதிரிபடை வருகிறது காண்பாய்
வடிவேலா வள்ளியம்மை உடனாகி வருவாய்
தஞ்சமென்ற தமிழினத்தின் தாழ்வினை நீ போக்கி
தலைவனை மக்களை காத்திடவே
தேரேறி வருவாய்!

காரை. எம். பி. அருளானந்தம்.

## சூரர் சிரமறு, நல்லூரா!

ஊரெல்லாம் வாட, உதிரம் வழிந்தோட
வேரெல்லாம் சாற, விழுமுயங்கள் வாய்சோர
நீரில்லா மீனாய் நிலத்தில் துடிப்போரைப்
பார் கந்தா! தமிழன் பாரில் அழுங்குலமா?
ஏர் ஊரும் மண்ணை எமனின் கணையுழுமா?
நீறித்தான் ஈழ நிசமழுமா? இல்லையென்று...
போராடும் எங்கள் புனிதம் முடிசூட
தேரேறு! சூரர்சிரமறு! வா! நல்லூரா.

— நல்லூரான்.

## சேவிப்போம் உன்னடியை!

தேர்மிசை நல்லூர்த் திருவீதி வந்தருள்வாய்
பார்மிசை மக்களெல்லாம் பாலிசைக்க – ஏர்மலிந்த
தெய்வத் திருமுருகா சேவிப்போம் உன்னடியை
உய்யும் வழியில் உயர்ந்து

உயர்ந்த திருப்பொலிவும் ஓங்குநற்கை வேலும்
நயந்5 சுகத்தினா விந்நாள் – வியந்திட்டதான்
வித்தோடொன் றாகும் விருட்ச நிழலெனவே
சித்துடன் எல்லாஞ் செறிந்து!

– வட்டூர்க் கடம்பன்.

## செந்தமிழால் தேர் இழுத்தோம்

மயிலேறி விளையாடி தமிழ் வளர்த்த வேலவா
பெருஞ் சூரன் தனைக் கொன்று புகழ் பூத்த –
ஆண்டவா
தந்தைக்கு உபதேசம் செய்த ஞானப் பண்டிதா
வள்ளியை மணம்முடிக்க கிழவேடம் போட்டவா —
இன்று
வேங்கைப் புலிவீரரை வாழ்த்திடு வேலா
வெற்றிபெற்று தமிழர்வாழ வழிசொல்லு ஆண்டவா
செஞ்சமரி மீதிலெதிரி லுடச்செய் செவ்வேளே
செந்தமிழால் தேர்இழுத்தோம் செருக்களத்தே –
வெற்றிதா!

– தயா லோகதாசன்.




சிறி நதியா நகை மாளிகை

மீண்டும், மீண்டும் செல்லத் தூண்டும்
காண்போர் மயங்கும் காட்சிக் கூடம்.

SREE NATHIYAA NAGAI MALIGAI

2G, Stanley Road, (Aruchuna Road)
JAFFNA.

2G, ஸ்ரான்லி வீதி, (அருச்சுனா வீதி)
யாழ்ப்பாணம்.

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனையாகின்றன

செங்கை ஆழியானின் நாவல்கள், சிறுகதைத் தொகுதிகள் அனைத்தையும் மலிவு விலையில் நல்லூர் உற்சவ தினங்களில் நல்லூர் ஆலய வீதியிலுள்ள பூபாலசிங்கம், ஸ்ரீகாந், தமிழ்த்தாய் புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம். (37994)

### மலிவு விற்பனை

சமய நூல்கள், பக்தி இசை கீதங்கள், இலங்கை - இந்திய சஞ்சிகைகள், நாவல்கள் பாடசாலை உபகரணங்கள் யாவும் விற்பனையாகின்றன. ஸ்ரீகாந்த் புத்தகசாலை, நல்லூர். [38145]

### இனாம்

தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தினால் நடத்தப்படும் நல்லூர் கண்காட்சி சாலையிலுள்ள அண்ணா தொழிலக விற்பனை நிலையத்தில் எமது உற்பத்திப் பொருள்களை 100/- ரூபாவுக்கு மேல் கொள்வனவு செய்து ஒரு அழகிய முருகன் படத்தை இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள். அண்ணா தொழிலகம், இணுவில். [சி-2071]

### புத்தகங்கள்

சிவலிங்கபிரஷ்டாவிதி, முப்பொருள் விளக்கம், வைதீக சந்தியாவந்தனா, சிவபூஜா விதி, விநாயகர் பரத்துவம், மூர்த்தி அலங்காரவிதி, சுப்பிரமணிய ஆலய நித்திய பூஜாவிதி, சைவசித்தார்த்த விதி, வேதாகம நிருபனம், சைவ பிரகாசிகைநாலாம் பதிகம், குமாரசுவாமி நினைவு மலர் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர். (சி-2098)

### SPECIA ANTENNA

To view Rupavahini, Madras, Programmes Fixing Special T. V. Antenna, Repairing Antennas, Radios T. V. Decks, Clocks and Watches. Venus Dilka Watch and Radio Works, 284, Stanley Road (Ariyakulam Junction), Jaffna. Branch: Kandy Roap, Chavakachcheri. [C-1976]

### O/L 95

பரீட்சைக்கான எல்லாப பாடங்களுக்குமான பயிற்சி வினாத்தாள்கள் விடையுடன் பெற்றுக் கொள்ளலாம். Bond 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [8648]

### புலமைப் பரிசில்

பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிறும் எம்மால் வெளியிடப்படுகின்றன. எமது பயிற்சிகள் மூலம் உங்கள் பிள்ளைகளை பரீட்சையில் வெற்றி பெறச் செய்யுங்கள். Bond 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (8646)

### றோணியோ, தட்டச்சு

தமிழ். ஆங்கில தட்டச்சு றோணியோ வேலைகள் சிறப்பாகச் செய்து தரப்படும். Bond 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [8647]

### திருமண சேவை

31 வயது, பரணி, செவ்வாயற்ற கணக்காளருக்கு படித்த மணமகள் தேவை. எம்மிடம் பல தர ஆண், பெண் குறிப்புகள் உண்டு. புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமண சேவை, மல்லாகம். இல. 178, நாவலர் வீதி, பறவுண் றோட் சந்தி (வேளாண்மைக்கு முன்பு), யாழ்ப்பாணம். [38151]


எமது மண்ணில் நற்பெயர் பெற்றது




றோயல் றோஸ்
ராக்கம்பவுடர்

- நறுமணமிக்கது
- சுகாதாரமிக்கது
- புத்துணர்ச்சியானது
- அனைவராலும் விரும்பதக்கது
- விலை மலிவானது

தீபா றோஸ்
ராக்கம்பவுடர்




அழகிய கொள்கலன்களில் அற்புத தயாரிப்பாக விற்பனையிலுள்ளது

றோயல் இன்டஸ்றீஸ்
பொன்னையா லேன்,
வண்ணார்பண்ணை வடமேற்கு.
ஆனைக்கோட்டை.

ஏக விநியோகஸ்தர்:

சிவா நறுமணப் பூங்கா
288, கேணல் கிட்டு சாலை,
[ஆஸ்பத்திரி வீதி]
யாழ்ப்பாணம். [சி-2089]


## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 18 — 07 — 1947

உதிர்வு: 04 — 09 — 1994

அரியாலை மேற்கு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
அமரர்

### இரத்தினகோபால் தியாகரத்தினம்

[தொழில்நுட்ப உத்தியோகத்தர்,
நீர்ப்பாசனத் திணைக்களம் - செங்கலடி]

திதி: இன்று 24 — 08 — 1995

பூமலர்ந்த சிரிப்பும், புன்னகையும் எங்கு போச்சோ
பொழுதெலாம் நீ பேசி நின்ற அன்பு வார்த்தை
எங்கு போச்சோ
தாயை நிகர் அன்புசெயும் 'தயாளகுணா'
எங்கு சென்றாய்
தாங்கவொணா துயர்கொண்டோம், தவிக்கின்றோம்
நாமெல்லாம்
ஆண்டு ஒன்று போனதுவோ - அன்ப நாம்
உமைப்பிரிந்து
ஆறிடுமோ எம் நெஞ்சம் அவலிளம்பாய் தவிக்கிறதே
ஆண்டவன்தான் சேர்த்திடுவாய் அன்புடனே
மலர் சாந்தி
வேண்டுகிறோம் ஆத்ம சாந்தி! வேழமுகத்தான் தாளில்.

அன்பு மறவாத;
தாய், சகோதர, சகோதரிகள்,
பிள்ளைகள்,

398/2, நொத்தாரிஸ் லேன்,
அரியாலை, யாழ்ப்பாணம். (38174)

## ஆண்டு ஒன்பதினிலே

பெறுக ஆத்ம சாந்தி



கோண்டாவில் மேற்கு

### சண்முகசுந்தரக் குருக்கள் சூரியகுமாரன்

(முகாமையாளர் ஹற்றன் தேசிய வங்கி
யாழ். கிளை)

மலர்வு: 20 — 11 — 1952

உதிர்வு: 24 — 08 — 1986

பெறுக ஆத்மசாந்தி!
கோண்டாவில் ஷண்முகசுந்தரக் குருக்கள்
குலலயத்தில் செய்தவத்தால் உதித்த மைந்தன்
பூண்டானே சூரியகுமாரன் தாம்
புரிந்தான் ஹற்றன் தேசிய வங்கிச் சேவை தன்னை
மாண்பான சேவையில் மகிமை பெற்றான்
மக்களுக்கு அன்பான சேவை செய்தான்
ஆண்டாண்டு தோறும் நாம் நினைந்தவனை
ஆத்மா சாந்திப்பேறு பெற வாழ்த்துவமே!

ஆத்ம சாந்தி வேண்டி நிற்கும்!
அம்மா, அண்ணா குடும்பத்தினர்
மற்றும் உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

கோண்டாவில் மேற்கு.
கோண்டாவில். [38168]

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



### வேலுப்பிள்ளை இராசநாயகம்

(குழந்தைவேல்)

மறைவு: 24 - 08 - 1989

எங்களை அன்புடனும், பாசத்துடனும் வாழ வைத்த தெய்வமே! உங்கள் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உரும்பராய், கிழக்கு.

[38078]

# உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## பட்டினி ஆயுதம்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் உணவுப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு உண்டாகும் ஆபத்தான நிலை குறித்து ஜனாதிபதி சந்திரிகாவின் நேரடிக் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார் யாழ். அரசாங்க அதிபர்.

அரசாங்கப் படைகள் கடந்த திங்களன்று வலிமேற்கில் நடத்திய 'ட்ரகன் பயர்' இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்தவர்களுக்கு வழமைப் பிரகாரம் முதல் மூன்று நாள்களுக்குச் சமைத்த உணவு வழங்க முடியாத அளவுக்கு, யாழ். செயலகத்தின் உணவுப் பொருள் கையிருப்பு வற்றிவிட்டது.

ஆனால், இங்கு மூன்று மாதங்களுக்குப் போதுமான உணவுப் பொருள்கள் கையிருப்பில் இருப்பதாக அரச தரப்பில் கொழும்பில் கூறப்படுகிறது. வடக்கு மக்களும் தமது பிரஜைகளே என்று கூறிக்கொண்டு, குடாநாட்டு மக்களைப் பட்டினியிலிருந்து காப்பாற்றுவது குறித்து அக்கறை காட்டாது, வேண்டாத வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டு நாள்களைக் கடத்துகிறது சந்திரிகா அரசு.

ஒப்பந்தத்துக்கு அப்பாற்பட்டு, குடாநாட்டில் பஞ்சம் உண்டாகமல் தடுப்பதற்காக, மனிதாபிமான அடிப்படையில், உணவுக் கப்பல்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் பணியை தற்காலிகமாகச் செய்வதற்குத் தான் தயாராக இருப்பதாகச் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அறிவித்து ஒரு வாரம் கடந்து போயிற்று.

ஆனால் அரசாங்கம் தனது நிலைப்பாட்டில் இருந்து அணு அளவும் அசையவில்லை. காங்கேசன் துறைக்குச் செல்லும் கப்பல்களுக்கும் செஞ்சிலுவைச் சங்கம் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற நிபந்தனையில் அடம்பிடித்துக் கொண்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய போது எவ்வாறு தமிழ் மக்களின் வாழ்க்கை நலனைவிட, இராணுவ நலனுக்கு அரசு முன்னுரிமை கொடுத்ததோ—

அதே போல, இப்போதும் குடாநாட்டு மக்களின் பட்டினியைத் தடுப்பதனைவிட இராணுவத்தின் உணவுத் தேவைக்கு முதலிடம் கொடுக்கிறது.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்காக அரசு பயன்படுத்தும் ஆயுதங்களில் அவர்களைப் பட்டினி போடுவதும் ஒன்றாகும். பட்டினி ஆயுதத்தால் பணிய வைக்கும் தனது முயற்சி இராணுவ இன அழிப்புக்கு உறுதுணையாக இருக்கும் என்று அரசு கருதுகிறது.

வடக்கே அனுப்பப்படும் உணவுப் பொருள்கள் விடுதலைப் புலிகளுக்கும் போய்ச் சேருகிறது. அதனைத் தடுப்பதற்கு வடக்கே உணவு அனுப்பக்கூடாது என்ற கருத்தும் அரசிடம் உண்டு. விடுதலைப் புலிகளைக் கொல்வதாகக் கூறிக்கொண்டு தமிழ் மக்களை அழிப்பதுபோல, புலிகளைப் பட்டினி போட்டு பலவீனப்படுத்துவதாகக் கருதிக் கொண்டு தமிழ் மக்களை பட்டினிப் போட்டுச் சாகடிப்பதற்கு அரசு அத்திவாரம் போடுகிறது.

ஆகையால் யாழ். அரசாங்க அதிபர் எழுப்பிய அபாயச் சங்கு, செவிடன் காதில் ஊதியதாகவே அமையும்!

### உணவுக் கப்பல் விவகாரம்:

## கதிர்காமர் திங்களன்று ஜனாதிபதியுடன் பேச்சு

யாழ். குடாநாட்டுக்கு உணவுக்கப்பல்களை அனுப்பி வைப்பது தொடர்பாக எழுந்துள்ள நெருக்கடி குறித்து வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

அதற்கு முன்னர் அமைச்சர் கதிர்காமர் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கொழும்பு அதிகாரி மார்க்கோ அல்தருடனும் பேச்சுக்கள் நடத்தினார்.

இந்த விடயம் குறித்து இதுவரை இணக்கம் ஏற்படவில்லை என்றும்—

இது தொடர்பாக தமக்கு எந்தவித பணிப்புரையும் கிடைக்கவில்லை என்றும் — அத்தியாவசிய சேவைகள் அலுவலகம் தெரிவித்ததாக வீரகேசரி செய்தி வெளியிட்டுள்ளது. (ஒ-3)

### சித்தன்கேணியில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. அவரது மனைவியும் ஐந்து பிள்ளைகளும் பதைபதைத்தனர்; கதறி அழுதனர்.

இரத்தம் அதிகமாக வெளியேறியதால், அதிகாலை வேளை அவர் மரணமானார். [ஒ-175-13]

## திருமலைக் கடற்படைத்

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டார்.

கடற்படைத் தளத்துக்கான தரை வழிகளைப் பாதுகாத்து ஊடுருவலைத் தடுப்பதற்காக இராணுவ, பொலீஸ் துருப்புகள் அங்கு உடனடியாக அனுப்பப்படாவிட்டால், கடற்படைத் தளத்தின் பாதுகாப்புக்கு கடற்படையினரால் உறுதி தரமுடியாது என்றும் கடற்படை வலியுறுத்திக் கூறியுள்ளது.

கடற்படைத் தளத்தை தாக்குவதற்கான முன்னேற்பாடாக தளத்துக்கு அருகில் உள்ள இறங்கு முனைகளை விடுதலைப் புலிகளின் சிறிய குழுக்கள் கைப்பற்றலாம் என்ற எதிர்வு கூறலுக்கு போதிய சாட்சியங்கள் உள்ளன.

புலிகளின் இத்தகைய தரையிறங்கு முயற்சியை முறியடிப்பதற்கு போதிய தரைத் துருப்புகள் தேவை என கடற்படை கருதுகின்றது.

### ஏப்ரல் தாக்குதல்

ஏப்ரல் 19 ஆம் திகதி திருகோணமலை கடற்படைத் தளத்தினுள் புலிகளின் தாக்குதலில் இரு கடற்படைக் கப்பல்கள் அழிக்கப்பட்டது போன்ற தாக்குதல்கள் மீண்டும் இடம்பெறுவதற்கு வாய்ப்பு இருப்பதாக அந்தப் படைத் தளபதி குறிப்பிட்டார்.

ஆனால் —

கிழக்கில் போதிய துருப்புகள் இல்லாத பெரும் பற்றாக்குறை நிலை நிலவுவதால் —

திருகோணமலை கடற்படைத் தளத்தின் பாதுகாப்புக்காக மேலதிக துருப்புக்களை அனுப்பி வைக்க முடியாத நிலையிலேயே இராணுவம் இருப்பதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டார்.

மட்டக்களப்பில் இருந்தும் திருகோணமலையிலிருந்தும் பெருமளவு துருப்புகள் வெளியேற்றப்பட்டு வடக்கில் குவிக்கப்பட்டுள்ள இந்த நிலையில் இந்த இரு மாவட்டங்களிலும் எஞ்சியுள்ள துருப்புகள் அங்குள்ள இராணுவ முகாம்களையே பாதுகாக்க போதுமானவையல்ல என இராணுவம் கருதுகின்றது.

போர் முனையில் திருகோணமலைத் தளமே புலிகளின் முதல் முக்கிய இலக்காக இருக்கும் என புலனாய்வுப் பிரிவினர் கருதுகின்றனர்.

கடற்படையின் 90 வீதமான கலங்கள் திருகோணமலைத் துறைமுகத்திலிருந்தே இயங்குகின்றன. இங்கிருந்தே மாதம்தோறும் ஆயிரக்கணக்கான தொன் பொருள்கள் வடக்கு யுத்தமுனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

### விநியோகம் தடைப்படும்

பலாலி, காங்கேசன்துறை, ஆனையிறவு, வெற்றிலைக்கேணி, பூநகரி, மன்னார்த்தீவு மற்றும் குடாநாட்டிற்கு மேற்கே உள்ள தீவுப் பகுதிகள் ஆகியவற்றுக்கான துருப்புகளும் விநியோகப் பொருள்களும் திருகோணமலைத் தளத்தில் இருந்தே அனுப்பி வைக்கப்படுகின்றன

துறைமுகத்தினுள்ளே வைத்து கடற்படைக் கலங்களை அழித்து, கடற்படைத் தளத்துக்கு பெரும் சேதம் ஏற்படுத்துவதையே புலிகள் விரும்புவதாக புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் நம்புகின்றனர்.

இந்தத் தளத்தை ஒரு சில வாரங்களுக்கு விடுதலைப் புலிகள் செயலிழக்கச் செய்துவிட்டால்—

மிகவிரைவில் வடக்கில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருக்கும் தாக்குதல் நடவடிக்கைக்குத் தேவையான பொருள்கள் மற்றும் ஆயுதங்களை விநியோகிப்பது முற்றாகத் தடைப்பட்டு விடும் என்று இராணுவ வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

### வடக்கு மீதான தாக்குதல் தடைப்படும்

யாழ்.குடாநாடு மீது நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள தாக்குதல் நடவடிக்கைக்குத் தேவையான ஆயுத தளபாடங்கள் திருகோணமலைத் தளத்திலிருந்து அனுப்பப்படும் என்பதால் அந்தத் தளத்தை அழிப்பதற்கு புலிகள் தங்களால் இயன்ற அனைத்தையும் செய்வர் என பாதுகாப்பு ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

எனவே தாக்குதலுக்காக திருகோணமலைத் தளத்துக்கு வெளியே புலிகள் ஒன்று கூடுவதைத் தடுக்க வேண்டும் என கடற்படை அதிகாரிகள் வலியுறுத்துகின்றனர்.

கடற்படை மற்றும் தரை வழி கூட்டு நடவடிக்கை மூலம் மட்டுமே பாதுகாப்பு முனைகள் ஊடாக இந்தத் தளத்துக்குள் புலிகள் ஊடுருவுவதைத் தடுக்க முடியும் என்றும் அவர்கள் நம்புகின்றனர்.

இதற்கிடையில் —

திருகோணமலை துறைமுகத்தில் உள்ள கப்பல் கட்டும் பகுதியில் பணிபுரியும் சுமார் எழுநூறு வேலையாட்களில் சிலர் மூலம் கடற்படைத் தளம் பற்றிய முழுத் தகவல்களையும் புலிகள் பெற்றிருக்கலாம் என்ற அச்சம் அதிகரித்து வருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் குறிப்பிட்டன.

வேலையாட்கள் மூலமோ அல்லது நேரடியாகவோ தமது ஆட்களை வேலையாட்கள் என்ற போர்வையில் உள்ளே அனுப்பி பூரணமான தகவல்களையும் புலிகள் பெற்றிருப்பர் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேசமயம் —

திருகோணமலை, காங்கேசன்துறை, காரைநகர்ப் பகுதிகளில் உள்ள தங்களது முகாம்களில் பல்வேறு பாதுகாப்பு முன்னேற்பாடுகளை கடற்படை செய்திருக்கின்றது.

— இவ்வாறு அந்தப் பத்திரிகை மேலும் குறிப்பிட்டது. (உ)

## இரவு முழுவதும் ஷெல் வீச்சு

வலிகாமம் மேற்குப் பகுதியை நோக்கி செவ்வாய்க்கிழமை இரவு 8.30 மணி தொடக்கம் நேற்றுப் [புதன் கிழமை,] காலை 7.30 மணி வரை பலாலி, காரைநகர், மாதகல் பகுதிகளில் இருந்து படையினர் இடை விடாது ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

இதனால் தொல்புரம், சங்கானை, சித்தன்கேணி ஆகிய இடங்களில் பல வீடுகள் சேதமடைந்துள்ளன. தொல்புரம் கிழக்கு அ.மி.த.க. பாடசாலையும் சேதமடைந்துள்ளது மக்கள் இடம்பெயர்ந்து சென்றமையினால் உயிர்ச் சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது. [ஒ-175]

## யாழ். அரச அதிபரை சந்திக்க சந்திரிகா மறுப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 24

யாழ். மாவட்ட உணவு நிலைமையை சீராக்குவது தொடர்பாக பேச்சு நடத்துவதற்கு யாழ். அரச அதிபரைச் சந்திக்க ஜனாதிபதி மறுத்து விட்டதாக கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

வடக்கே வரும் உணவுக் கப்பல்களுக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பாதுகாப்பு வழங்கும் விடயம் தொடர்பாக ஏற்பட்டுள்ள இழுபறி நிலை சம்பந்தமாக பேச்சு நடத்த சந்தர்ப்பம் தருமாறு யாழ். அரச அதிபர் க. பொன்னம்பலம் ஜனாதிபதியிடம் பல தடவைகள் அனுமதி கோரியதாகவும் —

தமது செயலாளர் மற்றும் புனர்வாழ்வு அமைச்சருடன் இது விடயமாகப் பேச்சு நடத்துமாறு ஜனாதிபதி பதில் அளித்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது. [ஒ-3]

## பாரிய தாக்குதல் நடத்த படையினர் திகதி நிர்ணயம்?

யாழ்ப்பாணத்தின் மீதான பாரிய தாக்குதலுக்கு இராணுவத்தினர் திகதியை நிர்ணயித்துவிட்டதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜூலை மாதம் 9 ஆம் திகதி தொடக்கம் வலிகாமம் மேற்கில் மேற்கொள்ளப்பட்ட "முன்னேறிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கையின் இரண்டாம் கட்டத்தை இம்மாதம் இறுதி வாரத்தில் நடத்தக் கூடும் என்று ஏற்கனவே ஊகங்கள் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

அந்தப் பாரிய தாக்குதலை அனேகமாக இம்மாதம் 27 ஆம் திகதி தொடங்குவதற்கு பாதுகாப்புப் படையினர் உத்தேசித்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் பிரஸ்தாபிக்கின்றன.

இந்த வாரத்தில் பெரும் எண்ணிக்கையான ஆயுதங்களும், ஆயுத தளபாடங்களும் திருகோணமலைத் துறைமுகத்தினூடாக கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

வெளிநாடுகளில் கொள்வனவு செய்யப்பட்டு பலத்த பாதுகாப்புடன் கொழும்புத் துறைமுகத்தில் இறக்கப்பட்ட ஆயுதங்களும் காங்கேசனுக்கு வந்திருப்பதாக நம்பப்படுகிறது. (அ-4)

## முதன்மை ஆசிரியர் தெரிவுப் பரீட்சை

முதன்மை ஆசிரியர் பதவி நியமனத்திற்கான தெரிவுப் பரீட்சை கல்வித்திணைக்களம் வலயம் 2 இல் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் என்றும் அன்றைய தினம் பிற்பகல் 1 மணியளவில் நேர்முகப் பரீட்சையும் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரெலோ அணி தலைவர் மீது துப்பாக்கிச் சூடு

வவுனியா மாவட்ட ரெலோ அணியின் தலைவர் விநோதன் என்பவர் தங்கியிருந்த வீட்டின் மீது நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இனம்தெரியாத சிலர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவர் வீட்டில் இருந்த போதும், காயம் ஏதுமின்றி தப்பிவிட்டதாக பொலீஸார் தெரிவித்தனர். (ந-6)

### நல்லூர் உற்சவகால அர்ப்பணம்

## காக்க வருவான்!

ராகம்: சந்திரிகா தாளம்: ஆதி

பல்லவி

நல்லூர் முருகன் திரு விழாக்காலம்
நாதஸ்வரம் மேளம் உலாக்கோலம்
[நல்லூர்]

அநுபல்லவி

பல்லாயிரம் அன்பர் திருக்கூட்டம் — அவன்
பாதம் தொழுவதற்கு இந்த ஓட்டம்
(நல்லூர்)

சரணம்

மாலை வெயில் குளித்து வீதி வருவான்குற
வள்ளி தெய்வானையுடன்கூட வருவான்
கோல மயிலின் மிசை ஏறி வருவான் — வேல்
கொண்டு நமைக்காக்க ஓடி வருவான்
[நல்லூர்]

அருண கிரிபுகழ்ப்பா கேட்டு வருவான் — அன்பர்
ஆடு காவடிகள் பின் கூட வருவான்
கருணை பொழிந்தபடி கந்தன் வருவான் — முரு
கா' என்றழைப் போரைத் தேடி வருவான்
[நல்லூர்]

- சோ. பத்மநாதன்

## இவரைக் கண்டீர்களா?



அளவெட்டியைச் சேர்ந்தவரும், இடம்பெயர்ந்து வந்து திருநெல்வேலியில் வசித்தவருமான.

### திரு. சுப்பிரமணியம் கனகரத்தினம்

[அராலி]

நேற்று முன்தினம் காலை 7.30 மணியளவில் வீட்டை விட்டுச் சென்றவர் இன்னும் திரும்பிவரவில்லை. இவருக்கு வயது 70, கறுப்பு நிறம், உயரமானவர் நீல நிறகோடிட்ட சாரமும், வெள்ளைச் சேட்டும் அணிந்திருந்தார். 'ஏசியா' றேசிங் சைக்கிளில் சென்றவர்.

இவர் பற்றிய தகவல் அறிந்தவர்கள் பொ. சிவசுப்பிரமணியம், 'உமையாள்' பணிக்கர் வளவு, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

நன்றி (38186)

## திருமண வைபவ இடமாற்றம்

வட்டுக்கோட்டை, எபநேசர் ஜெப நிலையத்தில் 26-08-95 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவிருந்த

**ஜெ. ஜெயசீலன் — குணேஸ்வரி (அனுசா)**

ஆகியோரின் திருமண வைபவம் அதே தினம் பரியோவான் ஆலய சிறுவர் பாடசாலை மண்டபத்தில் (கண்டிக்குளி, யாழ்ப்பாணம்) நடைபெறும் என்பதை தேவ ஊழியர்கள், உறவினர், நண்பர்கட்கு அன்புடன் அறியத் தருகிறோம்.

தகவல்:
ஜோண் இ. ஜெயசீலன்
சபைப்போதகர்
எபநேசர் ஜெப நிலையம்
வட்டுக்கோட்டை

(38182)

## 45 ம் நாள் நினைவஞ்சலி

### திருமதி
### நகுலேஸ்வரன் வசந்தமலா

9-7-95 அன்று அகால மரணமடைந்த எமது சக ஊழியரான ந. வசந்தமலர் அவர்களின் கணவன் பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர்களுக்கும், எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்/ போதனா வைத்தியசாலை
ஊழியர்கள்

[38181]

## மரண அறிவித்தல்

### திருமதி
### இலட்சுமிப்பிள்ளை மார்க்கண்டு

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இலட்சுமிப்பிள்ளை மார்க்கண்டு 22-08-1995 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் மார்க்கண்டுவின் அன்பு மனைவியும், திருச்செல்வம் (உதயன் அச்சுக்கோப்பாளர்) [சந்திரசேகரன், போராளி] பத்மராஜா [ம. நோ. கூ சங்கம் சங்கானை], ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் உரும்பராய் தெற்கிலுள்ள அவரது உறவினர் இல்லத்தில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
மா. திருச்செல்வம்
[மகன்]

தற்போதைய முகவரி:
அற்புதநாதன் (ராசன்)
உரும்பராய் தெற்கு,
மானிப்பாய் வீதி,
உரும்பராய்.

[சி/2107]

# வடக்கே கப்பல்கள் வரத் தடையாக இருப்பது பாதுகாப்பு அமைச்சே!

யாழ்ப்பாணம், ஓக. 24

வடக்கே உணவுக் கப்பல்கள் வராமைக்கு பாதுகாப்பு அமைச்சின் விடாப்பிடியான போக்கே காரணம் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

வடக்கே வரும் கப்பல்களுக்கு செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக—

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு ஏற்கனவே தெரிவித்த பல யோசனைகளை வாபஸ் பெற்றபோதும் இணக்கநிலை ஏற்படத் தடையாக இருப்பது பாதுகாப்பு அமைச்சின் விடாப்பிடியான போக்கே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்புத் துறைமுகத்தில் வைத்து கப்பலில் தாம் ஏற்றும் எந்தப் பொருளையும் தாம் சொல்லும் இடத்தில் இறக்க செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு சம்மதிக்குமானால், அவர்களின் பாதுகாப்புடன் கப்பல்களை வடக்கே அனுப்பலாம்— என்று பாதுகாப்பு அமைச்சு அழுங்குப்பிடியாக நிற்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (ஓ-3)

## கோட்டை முதலீட்டு சபை கட்டடத்தில் திடீர் தீ!

கொழும்பு, ஓக. 24

கொழும்புக் கோட்டை சேர். பாரன் ஜயதிலக மாவத்தையில் உள்ள முதலீட்டுச் சபை கட்டடத்தின் 2 ஆம் மாடியில் நேற்றுக் காலை 7.45 மணிக்கு திடீரென தீப் பற்றிக்கொண்டது.

அலுவலகத்தின் கொறியிடல் மற்றும் கணனிப் பிரிவிலேயே பெரும் தீ மூண்டு பரவத் தொடங்கியது.

10 தீயணைப்பு வாகனங்களைப் பயன்படுத்தி சுமார் 4 மணித்தியாலங்களின் பின்னர் தீ ஒருவாறு அணைக்கப்பட்டது.

தீயினால் சில முக்கிய கோவைகளும், கணனிகளும் தீக்கிரையாகியுள்ளன. அந்நிய முதலீடு குறித்த முக்கிய கோவைகளும் தீயில் நாசமாகின. முதலீட்டுச் சபையின் பணிகள் மறு அறிவித்தல் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

தீ பரவியதற்கு மின் சார ஒழுக்கே காரணமாக இருக்கும் எனக் கூறப்பட்ட போதும், சதி முயற்சி ஏதும் இடம்பெற்றதா என்பது குறித்தும் பொலீஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஒ-எ-3-6)

## கொழும்பில் யாழ். வாசிகள் ஐவர் கைது

கொழும்பு, ஓக. 24

கொழும்பில் விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரிக்கும் நிலையம் ஒன்றை நடத்தி வந்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் தமிழர்கள் சிலரை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்பு மத்திய பூங்காவில் உள்ள சந்தைக் கட்டடத்தில் அமைந்திருந்த இந்த நிதி சேகரிப்பு நிலையத்தின் இயக்குநர் புத்தூரைச் சேர்ந்த கந்தசாமி என பொலீஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையம் வர்த்தக நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டிருந்ததாகவும் — தற்போது கந்தசாமியையும் அவருடன் இணைந்து செயற்பட்ட வேறு ஒருவரையும், இவர்களுக்கு நிதியுதவி வழங்கியவர்கள் என மேலும் 3 தமிழர்களையும் கைது செய்துள்ளதாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், தற்காலிகமாக கொழும்பில் தங்கியிருந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. [எ]

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஓக. 24

முல்லை மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற தவறுதலான துப்பாக்கிச் சூட்டில் லெப்டினன்ட் மணிவண்ணன் (வேதநாயகம் செல்வநாயகம் —புதுக்குடியிருப்பு) வீரச்சாவு அடைந்தார் (ஓ-3)

## ரஸெப் வகுப்புகள்

யாழ்ப்பாணம் ஓக 24

மறு அறிவித்தல் வரை பலாலி ஆசிரிய கலாசாலையில் நடைபெற்று வரும் 'ரஸெப்' ஆங்கில வகுப்புகள் பிற்போடப்பட்டுள்ளதாக மாநில இணைப்பாளர் திரு. சோ. பத்மநாதன் அறிவித்திருக்கிறார்.

## செப்ரிசீமியா மரணம்

யாழ்ப்பாணம், ஓக. 24

கடும் காய்ச்சல் ஏற்பட்டு கடந்த ஒரு வார காலமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 9மாத ஆண் குழந்தை ஒன்று செப்ரிசீமியா தாக்கத்திற்குள்ளாகி நேற்று முன்தினம் மரணமாகியது.

பண்டத்தரிப்பு பனிப்புலத்தைச் சேர்ந்த சோமநாதன் ராணி என்ற குழந்தையே இவ்வாறு மரணமானது. (எ-13)

## வெதுப்பக உரிமையாளர்களுக்கு அன்பான வேண்டுகோள்

யாழ். மாவட்டத்திற்கு மா கப்பலில் வராத காரணத்தினாலும், களஞ்சியத்திலுள்ள மாவின் கையிருப்பு மிகமிக குறைந்துள்ளமையாலும் எமது சங்கத்திற்கு வழங்கப்படும் மா மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் மக்களின் நலன் கருதி தங்களுக்கு விநியோகிக்கப்படும் முழு மாவினையும் வெதுப்பி உற்பத்திக்கு மாத்திரமே பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

வெதுப்பகங்களில் உற்பத்தி செய்யப்படும் வெதுப்பியை தவிர்ந்த எந்தவிதமான உற்பத்தியையும் நாளை 25-08-95 வெள்ளிக்கிழமையிலிருந்து மறு அறிவித்தல் வரும் வரை நிறுத்தி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

எக்காரணம் கொண்டும் வெதுப்பியின் நிர்ணயிக்கப்பட்ட நிறை, விலை, தரம் ஆகியவற்றில் மாற்றம் செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும்.

தலைவர்,
யாழ். மாவட்ட வெதுப்பக
உரிமையாளர் சங்கம்.

183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(சி-2104)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 27 — 07 — 1943

மறைவு: 25 — 07 — 1995

அமரர்

### செல்லையா சண்முகநாதன்

(ஆசிரியர் இணுவில் இந்துக் கல்லூரி)

வடிவு கொண்ட ஓவியமே
நெஞ்சமெல்லாம் நெருப்பாக
நினைவெல்லாம் உனக்காக
வெப்பத்தால் வெதும்புகிறோம்
வேதனையால் துடிக்கின்றோம்
பூவுலகில் எம்மை காத்தது போல்
மேலுலகிலிருந்தும் காப்பாய் ஐயா!

உமது பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

''வள்ளுவர் இல்லம்''
இணுவில் மேற்கு,
இணுவில்.

[38179]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 24-08-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.